Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

Official Property Record

Digitally Verified Record - Powered by Verified RealEstate™

-11-

தனி அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) சூளகிரிஅவர்களின் செயல்முறைகள் முன்னிலை : திரு.ஒ.ஜெபராஜ் சாமுவேல்,

(23)

ந.க.எண் : 1736/2018/இ2 நாள் : 11.01.2019

பொருள் : மனைப்பிரிவு - அங்கீகாரம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - சூளகிரி ஊராட்சி ஒன்றியம் - சூள கிரி ஊராட்சி மற்றும் கிராம ம் - ச.எண்:54/2B & 54/2C -ல் 3.16 ஏக் கர் பரப்பளவில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - தொழில் நுட்ப அனுமதி வழங்கியது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடுதல் - தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண்:79, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD4(3)துறை நாள் :04.05.2017.
2. துணை இயக்குநர், தமிழ் நாடு அரசு நகர் ஊரமைப்பு ஊரமைப்பு துறை, தருமபுரி மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்.
3. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்-1 என்பவரின் அறிக்கை நாள்: 11.01.2019.
4. திரு.எண்.கண்ணன் என்பவரின் உறுதி மொழி பத்திரம் நாள்: 10.01.2019.

உத்தரவு:-

சூளகிரி ஊராட்சி ஒன்றியம் சூளகிரி ஊராட்சி மற்றும் கிராமம் ச.எண்:54/2B & 54/2C -ல் 3.16 ஏக்கர் பரப்பளவில் பரப்பளவு கொண்ட இடத்தில் அமைக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ./ந.ஊ.து.இ(த.ம) எண்:114/2018 என எண்ணிட்டு தொழில் நுட்ப அனுமதி பார்வை 2-ல் காணும் கடிதத்தின்படி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த உள்ளாட்சி நிர்வாகத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள் மற்றும் ஒப்படைக்கப்பட வேண்டிய சாலைகள் நிர்ணயம் செய்து துணை இயக்குநர், தமிழ் நாடு அரசு நகர் ஊரமைப்பு துறை, தருமபுரி மண்டலம் அவர்களால் பார்வை 2-ல் காணும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் உள்ள சாலைகள் மற்றும் பூங்காக்கள் உள்ளாட்சி நிறுவனத்திற்கு மனுதாரரால் சூளகிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்:3303/2018 நாள்:26.07.2018 அன்று சூளகிரி ஊராட்சி ஒன்றிய தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பெயரில் தானப்பத்திரம் செய்து ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை 1-ல் காணும் அரசாணை எண்:79-ன் படி நிலப்பயன் மாற்றக் கட்டணம் மனையிடப் பரப்பின் சந்தை மதிப்பீட்டில் (Market Value) 3% வீதம் உரிய கணக்கு தலைப்பில் 027 Urban Development - 60 Other Urban Development Schemes -800 Other Receipts -AS Receipts Under Land Use Conversion Charges - 17 Non - Taxation Fees - 09 Collection என்ற அரசுத் தலைப்பில் ரூ. 15879/- (Rupees Fifteen Thousand Eight Hundred and Seventy Nine Only) 27.12.2018 அன்று ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, ஒசூர் கிளையில். செலுத்தப்பட்டுள்ளது. நில உபயோக மாற்ற தொகை ரூ. 31700/- (Thirty One Thousand Seven Hundred Only) ஊராட்சி பொது நிதி மனுதாரரால் 28.12.2018 அன்னு ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, சூளகிரி ஊராட்சி மற்றும் கிராமம் ச.எண்:54/2B & 54/2C -ல் 3.16 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் கோரப்பட்ட 78 மனைகளில் ஒதுக்கப்பட்ட 54 + நலிவடைந்த பிரிவினர் மனைகள் 21 மனைகள் மட்டும் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு இறுதி ஒப்புதல் அளித்து இதன் வழி உத்தரவிடப்படுகிறது.

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள், அரசு புறம்போக்கு, திறந்தவெளி ஒதுக்கீடு, அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை, உத்தேச சாலை மற்றும் Rall Corridors, பொது பாதை மற்றும் நில உச்சவரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடப், அதிக உயர்மின்னழுத்த பாதை கீழ் அமைத்திருக்க கூடாது.

K. Nachal.

E:\E Drive Files\sarala\E2\1607 .02.01.2019.doc

2. தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடங்களில் குறிக்கப்பட்டுள்ள உபயோகங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். அந்த இடங்களை ஒதுக்கப்பட்ட உபயோகத்திற்காக நில அளவு ஆவணங்களில் உட்பிரிவு செய்து கொள்ளலாம்.
3. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை துணை இயக்குநர், தமிழ் நாடு அரசு நகர் ஊரமைப்பு துறை, தருமபுரி மண்டலம் அவர்களின் பார்வை 2-ல் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு, முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களில் சரித்தன்மை குறித்து புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
4. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் சூளகிரி ஊராட்சியின் தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் கட்டிட அனுமதி பெறப்பட வேண்டும்.
5. நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீரனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் உத்தரவு சூளகிரி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களால் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
6. இம்மனைபிரிவின் நிலங்கள் தொடர்பாக நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் இருந்து தீர்ப்பு எதிராக வரப்பெற்றால் இறுதி ஒப்புதல் வழங்கிய உத்தரவு இரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இணைப்பு: ஊராட்சி ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம்-1

தனி அலுவலர்/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
சூளகிரி.

S.O / B.D.O.(V.P)
Shoolagiri Panchayat

பெறுதல்:
திரு.கண்ணன் மற்றும் இருவர்
எண்.28 பெர்லி தெரு, சாந்தி நகர்,
பெங்களூர்- 560025

நகல்: துணை இயக்குநர், தமிழ் நாடு அரசு நகர் ஊரமைப்பு, தருமபுரி மண்டலம் தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

நகல்: தனி அலுவலர், சூளகிரி ஊராட்சி, சூளகிரி ஊராட்சி ஒன்றியம்

K. Nachal

25

தமிழ்நாடு அரசு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தருமபுரி மண்டலம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை.திருமதி.ஜி.வசந்தி,பி.இ.,

ந.க.எண்.562/2018/தம. நாள்.26 .11.2018.

பொருள். மனைப்பிரிவு - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் தருமபுரி மண்டலம்-கிருஷ்ணகிரி மாவட்டம் - சூளகிரி வட்டம் / ஊராட்சி ஒன்றியம் - சூளகிரி ஊராட்சி / கிராமம்- ச.எண்.54/2B & 2C-ல் 3.16 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு - தொழில் நுட்ப அனுமதி வழங்குதல் - தொடர்பாக.

பார்வை.
1) மனுதாரர்கள் திரு.N,கண்ணன் (ம) இருவர் அவர்களின் Online விண்ணப்பம் எண்.201801001010113 நாள்.11.01.2018
2) இணை இயக்குநர் வேளாண்மை துறை கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் கடிதம் எண்.இ1/475/ 2018 நாள். 05.02.2018
3) இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள். 28.03.2018 (தனி அலுவலர், சூளகிரி ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு முகவரியிட்டது)
4) வட்டார வளர்ச்சி அலுவலர், சூளகிரி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் கடிதம் ந.க.எண்.1736/2018/இ2, நாள்.26.09.2018
5) இவ்வலுவலக கடிதம் நாள் . 16.11.2018 (நன்னிலை வரி கட்டணம் கோரப்பட்டது)
6) மனுதாரர் நன்னிலைவரி கட்டணம் செலுத்தி பெறப்பட்ட நாள்.20,11.2018
7) அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள். 04.05.2017

உத்தரவு

பார்வை1-ல் சுட்டிய மனுதாரர்கள் கடிதத்துடன் பெறப்பட்ட இப்பொருளில் காணும் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம் / ஊராட்சி ஒன்றியம், சூளகிரி ஊராட்சி / கிராமம, ச.எண்.54/2B & 2C-ல் 3.16 ஏக்கர் பரப்பளவு இடத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க பெறப்பட்ட விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு அதற்கான சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடம் பார்வை 3-ல் சுட்டிய இவ்வலுவலக கடிதத்துடன் அனுப்பப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டவாறு பார்வை 4-ல் சுட்டிய கடிதத்தில் சாலை மற்றும் பூங்கா ஆகியவற்றிற்கான இடத்தினை சூளகிரி ஊராட்சி ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களுக்கு தானமாக பதிவு செய்து (சூளகிரி சார்பதிவாளர் அலுவலக பதிவு பத்திரம் எண்.3303/2018 நாள்.26.07.2018) கொடுத்துள்ளதாகவும் அதில் மனைப்பிரிவு சாலைகள் தார் சாலைகளாகவும் மற்றும் மின்கம்ப வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போது மேற்படி இடங்கள் சூளகிரி ஊராட்சி ஒன்றியத்தின் பொறுப்பில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டம் / ஊராட்சி ஒன்றியம், சூளகிரி ஊராட்சி / கிராமம, ச.எண்.54/2B & 2C-ல் 3.16 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு <u>ம.வ./ந.ஊ.து.இ(த.ம)எண்.114/2018</u> என எண்ணிட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்படுகிறது.

K. Nachal.

2.

இத்தொழில் நுட்ப அனுமதியினைத் தொடர்ந்து ஊராட்சியால் இம்மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட விவரம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பார்வை 7-ல் சுட்டிய அரசாணை எண்.79-ன் படி நிலப்பயன் மாற்றக் கட்டணம் மனையிடப்பரப்பின் Market Value-ல் 3% வீதம் கீழ்கண்ட கணக்கு தலைப்பில் வசூலித்து கொண்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

Head of Account
0217 – Urban Development -60 Other Urban
Development Schemes-800 Other Receipts-AS
Receipts Under Land use conversion charges-27
Non-Taxation fees-09 Collections.
DPC: 0217-60-800-AS-2790

மேலும் இக்கடிதம் மற்றும் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்று அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
தருமபுரி மண்டலம், தருமபுரி.

26/11/18

26/11/18

இணைப்பு
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடம் -2 நகல்கள்

பெறுநர்

தனி அலுவலர்,
சூளகிரி ஊராட்சி,
சூளகிரி ஊராட்சி ஒன்றியம்,
சூளகிரி வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

நகல்
சார்பதிவாளர்,
சூளகிரி சார்பதிவாளர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்

மனுதாரர்
திரு.என்.கண்ணன் மற்றும் இருவர்,
எண்.28, பெர்லி தெரு,
சாந்தி நகர்,
பெங்களூர்- 560 025

K. Nachal.



our services doesn't just end there

Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.

empowering your real estate decisions with smart tools

Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate